20-ம் இருக்கின்றன. நெல்லை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஆதாரப் பயிற்சிப்பள்ளிகள் 15ம், மற்ற பயிற்சிப் பள்ளி ஒன்றும் இருக்கின்றன. மேலும், நெல்லை மாவட்டத்தில் பெண்களுக்கான 8 பயிற்சிப் பள்ளிகள் இருக்கின்றன. தவிர, ஒவ்வொரு ஆண்டும், பயிற்சி பெற்று வருகின்ற ஆசிரியர்களுக்கு இடம் தேடிக் கொடுக்கின்ற பொறுப்பும் அரசாங்கத்திற்கு இருக்கிறது. அந்த வகையிலே, கல்வித் துறை இயக்குனர் அவர்கள், இந்தப் பயிற்சிப் பள்ளிகளின் மூலமாகத் தேவையான ஆசிரியர்களைப் பெற முடியும், எனவே, இப்போதுள்ள பயிற்சிப் பள்ளிகளே போது மானவை என விளக்கியுள்ளார். மேலும் பயிற்சிப் பள்ளிகளை அதிகமாக்குவதன் மூலம், வெளிவருகின்ற ஆசிரியர்களுக்கு இடமளிக்க முடியாத நிலையில் வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படும் என்ற காரணத்தாலும், தற்போது வேறு எந்தப் பயிற்சிப் பள்ளியும் துவக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யவில்லை. பின்னர் தேவையானபோது, அது பற்றி ஆலோசித்து முடிவு எடுக்கும்.

High Schools in Thanjavur district

* 240 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. The Minister for Education and Industries be pleased to state—

(a) whether it is a fact that all Government High Schools in Thanjavur district had to postpone their terminal examinations for Standards VI to X which should have begun on 11th April 1967; and

(b) if so, the reasons therefor?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) பள்ளிகளுக்கு வினாத்தாள்கள் அனுப்புவதில் கால தாமதம் ஏற்பட்டதாலும், ஓரத்தநாட்டில் 9—4—1967 அன்று வினாத்தாள்கள் களவு போனதாலும் தேர்வு நடத்த இயலவில்லை.

THIRU K. VINAYAKAM: Sir, may I know the valid reasons for the delay in the despatch of these question papers from our Government Press if they have been printed in the Government Press and how the theft has occurred? Who was found responsible for that theft and what action was taken against the culprit?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலுள்ள கழகப் பள்ளியில் 9—4—1967-ல் தேர்வு நடைபெறுவதாக இருந்தது. ஆனால், வினாத்தாள்கள் காலா காலத்தில் உரிய இடத்திற்குப் போய்ச் சேரவில்லை. காரணம் காண்ட்ராக்டர்கள் அதை அனுப்பி வைப்பதற்கான முயற்சிகளில் காலதாமதம் ஏற்பட்டது. ரயில்கள் மூலம் அனுப்புவதற்கான முயற்சியில் நெருக்கடிகள் ஏற்பட்டு காலதாமதம் ஏற்பட்டது. 9—4—1967-ல் நடைபெறவிருந்த தேர்வு, 20—4—1967-ல் நடைபெற்றது. அந்தக் காண்ட்ராக்டர்கள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் ஓரத்தநாடு பள்ளியில் வினாத்

தாள்கள் களவு போய்விட்டதாக கூறப்பட்டது. அந்தப் பள்ளியின் தலைமை ஆசிரியர் மீது தக்க நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்து வருகிறது.

திரு. கே. விநாயகம் : இதுமாதிரி, நேரத்தில் நடக்கக்கூடிய தேர்வு நடக்காமல் போனது மற்ற எந்த ஆட்சியிலும், எப்போதும் நடக்கவில்லை. இப்போதிருக்கும் கட்சி, ஆட்சி செய்கின்ற நேரத்தில்தான் இப்படிப்பட்ட காரியங்கள் நடக்கின்றன என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இந்த மாதிரியான காரியங்கள், சென்ற அரசின் தொடர்ந்த காரியங்களாகத்தான் கருதப்பட வேண்டும். 9—4—1967-ல் தேர்வு நடத்தவும், அதற்கான வினாத்தாள்களை அனுப்புவதற்காக கண்ட்ராக்டர்களை நியமித்ததும் சென்ற அரசின் நடவடிக்கைகளாகும். 9—4—1967-ல் தேர்வு என்றால், சுமார் ஆறு மாத காலத்திற்கு முன்னால் காண்ட்ராக்ட் விடப்பட்டிருக்கும். ஆகவே, சென்ற அரசினுடைய கெடுதல்கள் இந்த அரசைத் தாக்குகின்றன என்று சொல்லலாம். எதிர்காலத்தில் இப்படிப்பட்ட காரியங்கள் நடக்காமலிருக்கத் தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. கே. விநாயகம்: வினாத்தாள்கள் திருடு போனது இப்போதிருக்கும் ஆட்சியில் மட்டும்தான் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, திருடு போய்விட்டது என்று தலைமை ஆசிரியர் அவர்களிடமிருந்து தகவல் வந்தது. ஆனால், சென்ற இருபது ஆண்டுகளில் என்ன என்ன வகைகளில், என்னென்ன திருடு போயின என்பதை வேண்டுமானால் பட்டியல் போட்டுத் தருகிறேன். ஆகவே, இப்போதிருக்கும் அரசாங்கத்தினுடைய நிலைக்கும், வினாத்தாள் களவு போனதற்கும் தொடர்பு இல்லையென்று கருதுகிறேன்.

Government Training College, Katpadi

* 241 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether there is any proposal to admit lady candidates also in the Government Training College at Katpadi for the B.T. and Vidwan Training (Tamil) Courses?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

THIRU K. VINAYAKAM : Whereas it has been found that training colleges for women are very scarce in our State and whereas a dire necessity has been felt in the North Arcot District, will the Minister reconsider the decision and issue fresh orders conceding my proposal?